



# ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387 உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்

ANANDA BHASKAR www.anandabhaskar.com





சென்னை மலர்: 01 இதழ்: 139 14.11.2025 வெள்ளிக்கிழமை | Chennai | Volume: 01 | Issue: 139 | Friday | pages 4 | Rs.5/-

## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(14-11-2025)
விசுவாவசு ஆண்டு, ஐப்பசி-28

பிறை: தேய்பிறை

திதி
தசமி மறுநாள் விடியற்காலை 4.55 வரை பிறகு ஏகாதசி.

நட்சத்திரம்:
பூரம் நள்ளிரவு 1.51 வரை பிறகு உத்திரம்.

யோகம்
சித்தயோகம்

ராகுகாலம்
காலை 10.30-12.00 மணி

எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30 மணி.

சூலம் – மேற்கு.

நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 5-6.

| | |
|---|---|
| மேஷம் | விவேகம் |
| ரிஷபம் | மாற்றம் |
| மிதுனம் | விருத்தி |
| கடகம் | லாபம் |
| சிம்மம் | ஆதரவு |
| கன்னி | ஆசை |
| துலாம் | உதவி |
| விருச்சிகம் | உறுதி |
| தனுசு | நம்பிக்கை |
| மகரம் | உழைப்பு |
| கும்பம் | நற்செய்தி |
| மீனம் | உதவி |

# தில்லி சம்பவம்: கான்பூரில் மேலும் ஒரு மருத்துவர் கைது!

**டெல்லி,நவ.14:**



தில்லி கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் உத்தரப் பிரதேச மாநிலம் கான்பூரில் முதுகலை படித்து வரும் ஒரு மருத்துவ மாணவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தில்லிசெங்கோட்டைஅருகே நவ. 10 (திங்கள்கிழமை) அன்று நடந்த கார் குண்டுவெடிப்புச் சம்பவம் பயங்கரவாதிகளின் சதி என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

அதற்கு முன்னதாகவே இதுதொடர்பான வழக்கின் விசாரணை பயங்கரவாத தாக்குதல்கள் குறித்து விசாரிக்கும் தேசிய புலனாய்வு முகாமையிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த சம்பவத்தில் முக்கிய குற்றவாளியாகக் கருதப்படும் உமர், காரை ஓட்டி வந்துள்ளது டிஎன்ஏ சோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஃபரிதாபத்தில் உமருடன் தொடர்பில் இருந்த 3 மருத்துவர்கள் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஏற்கெனவே கைது செய்யப்பட்ட பெண் மருத்துவர் ஷாஹீன் ஷாஹித்துடன் தொடர்பில் இருந்த முகம்மது ஆரிஃப் என்ற மருத்துவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தில்லி காவல்துறை சிறப்புப் பிரிவு, ஜம்மு-காஷ்மீர் காவல்துறை மற்றும் உத்தரப் பிரதேச பயங்கரவாத தடுப்புப் பிரிவு போலீசார், ஆரிஃப்பை நேற்று கைது செய்துள்ளனர்.

ஆரிஃப் ஒரு இதய நோய் மருத்துவர். இவர் தில்லி சம்பவம் நடந்த சில நாள்களுக்கு முன்பாக கான்பூரில் ஷாஹீனைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

ஜம்மு-காஷ்மீரின் அனந்த்நாக் பகுதியைச் சேர்ந்த ஆரிஃப், ஃபரிதாபாத்தில் உள்ள அல்ஃபலா பல்கலைக்கழகத்தில் இளநிலை பயின்றார். 5 மாதங்களுக்கு முன்பு, அவர் கான்பூரில் உள்ள ஜிஎஸ்விஎம் மருத்துவக் கல்லூரியில் முதுகலை படிப்புக்குச் சேர்ந்துள்ளார்.

அந்த கல்லூரியில் முதலாமாண்டு இதய நோய் நிபுணருக்கு படித்து வருவதாகவும் 2-3 மாதங்களுக்கு முன்பு கவுன்சிலிங்கில் வந்ததாகவும் அவர் கல்லூரி வளாகத்தில் தங்கவில்லை, வெளியில்தான் தங்கியிருக்கிறார் எனவும் அங்குள்ள மற்றொரு மருத்துவ மாணவர் தெரிவித்துள்ளார்.

தில்லி செங்கோட்டை குண்டுவெடிப்பில் இவருக்கு தொடர்பிருக்கலாம் என காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அமெரிக்க அரசின் முடக்கம் முடிவு! நிதி மசோதாவில் டிரம்ப் கையெழுத்து!



**நியூயார்க்,நவ.14:**

அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஒவ்வொரு ஆண்டு அடுத்தாண்டுக்கான செலவுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் மசோதா நிறைவேற்றப்பட வேண்டும். இந்த மசோதாவுக்கு 60 சதவீத வாக்குகள் தேவை.

ஆனால், எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியின் எம்பிக்கள் மசோதாவுக்கு எதிராக வாக்களித்ததால், மசோதா நிறைவேறாமல் கடந்த 43 நாள்களாக அரசுத் துறை முடங்கியிருந்தது.

இதனால், அரசின் பல்வேறு துறைகள் முடங்கிய நிலையில், விமானக் கட்டுப்பாட்டு அறை ஊழியர்கள், பாதுகாப்புப் படையினர், மருத்துவத்துறை உள்ளிட்ட அத்தியாவசியப் பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்தனர். இருப்பினும், அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படாததால், அவர்களும் பணிக்கு வராததால் விமானப் போக்குவரத்து கடந்த சில நாள்களாக முடங்கியது.

இந்த நிலையில், தங்களது கட்சி நிலைப்பாட்டை மீறி, அரசுத் துறைகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் சமரசம் செய்துகொள்ள சில ஜனநாயகக் கட்சி எம்.பி.க்கள் முன்வந்ததையடுத்து, இந்த மசோதா செனட் அவையில் புதன்கிழமை நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, ஓவல் அலுவலகத்தில் செலவீனங்களுக்கான மசோதாவில் டிரம்ப் கையெழுத்திட்டார்.

அப்போது பேசிய டிரம்ப், "கடந்த 43 நாள்களாக, சட்ட விரோதமாக குடியேறுபவர்களுக்காக கோடிக்கணக்கான டாலர்களைப் பறிக்க முயற்சித்த ஜனநாயகக் கட்சியினர், அமெரிக்க அரசை முடக்கினர். நேற்று, மிரட்டி பணத்தைபறிப்பதற்குஒருபோதும் அடிபணிய மாட்டோம் என்ற தெளிவான செய்தியை நாங்கள் சொல்ல விரும்புகிறோம்" எனத் தெரிவித்தார். இந்த மசோதாவில் டிரம்ப் கையெழுத்திட்டதன் மூலம், 43 நாள்களுக்குப் பிறகு, நாளை காலைமுதல் அனைத்து துறைகளும் வழக்கம்போல் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க செனட் அவையில் 222 பேர் மசோதாவுக்கு ஆதரவாகவும், 209 பேர் எதிராகவும் வாக்களித்தனர்.

# நவ.17ல் சென்னைக்கு கனமழை எச்சரிக்கை!

**சென்னை,நவ.14:**

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ள நிலையில், நவ.17ல் சென்னையில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அக்டோபர் 17-க்குப் பிறகு வடகிழக்குப் பருவமழை தொடங்கிய நிலையில், தமிழகத்தில் பரவலாக மிதமானது முதல் கனமழை பெய்தது.

இந்த நிலையில் நவம்பர் 17-க்குப் பிறகு வடகிழக்குப் பருவமழை தீவிரமடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, 17-11-2025 தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

# கரூர் விவகாரம்: மின்வாரிய அதிகாரிகளிடம் சிபிஐ விசாரணை

**கரூர்,நவ.14:**



கரூர் கூட்ட நெரிசலில் 41பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக சிபிஐ விசாரணையை தீவிரப்படுத்தி உள்ளது.

சிபிஐ விசாரணைக்காக மின்வாரிய அதிகாரிகள் 2 பேர் நேரில் ஆஜராகியுள்ளனர்.

கரூர் மின்வாரிய அதிகாரி கண்ணன் சிபிஐ முன் விசாரணைக்காக ஆஜராகி உள்ளார்.

கரூரில் நடைபெற்ற தாவெக கூட்டத்தில் விஜய் பேசி கொண்டிருந்தபோது மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக புகார் எழுந்தது.விஜய் பேசி கொண்டிருந்தபோது மின்சாரம் துண்டிக்கப்படவில்லை என மின்வாரியம் தரப்பில் கூறியிருந்தது.

இந்நிலையில், மின்வாரிய அதிகாரிகளிடம் சிபிஐ விசாரணை நடத்தி வருகிறது.

# அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு




**சென்னை,நவ.14:**

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான அகவிலைப்படியை உயர்த்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு 55% ஆக இருந்த அகவிலைப்படியை 58% ஆக உயர்த்தி உத்தரவிட்டார்.

ஜூலை 1 முதல் கணக்கிட்டு அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அகவிலைப்படி உயர்வால் ஆண்டுக்கு ரூ.1829 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். அகவிலைப்படி உயர்வால் சுமார் 16 லட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள்.

# ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்

**காபூல்,நவ.14:**

ஆப்கானிஸ்தானில் வியாழக்கிழமை அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 4.6 ஆகப் பதிவாகி உள்ளது என தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் (என்சிஎஸ்) தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த மையம் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் நகரில் இந்திய நேரப்படி வியாழக்கிழமை அதிகாலை 2.20 மணியளில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. அட்சரேகை 36.43, தீர்க்கரேகை 71.38, பூமிக்கடியில் 140 கி,மீட்டர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த அந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.6 அலகுகளாகப் பதிவானது என்று அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தினால் சுற்றுவட்டார பகுதிகளில் பரவலாக நில அதிர்வு உணரப்பட்டதாகவும், எனினும், இந்த நிலநடுக்கத்தால் உயிர்ச் சேதமோ, பொருள் சேதமோ ஏற்பட்டதாக உடனடி தகவல் இல்லை.

ஆப்கானிஸ்தானில் கடந்த 8-ஆம் தேதி 4.4 ரிக்டர் அளவு கொண்ட நிலநடுக்கம் ஏற்பட்டது நினைவுகூரத்தக்கது.

# கோவில் பிரசாதங்களில் ரசாயனம் கலந்து தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் சதி- அண்ணாமலை

**கோவை,நவ.14:**

பா.ஜ.க முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

கோவையில் வருகிற 19-ந் தேதி தென்னிந்திய இயற்கை விவசாய சம்மேளம் சார்பில் இயற்கை விவசாய மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக வருகிற 19-ந்தேதி பிரதமர் மோடி கோவைக்கு வருகிறார்.இந்த மாநாட்டில் பிரதமர் மோடி 5 ஆயிரம் இளம் இயற்கை விவசாயிகளை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாட உள்ளார். தென்னிந்தியாவில் பணிபுரியும் 50 இயற்கை விஞ்ஞானிகளை சந்தித்து பேசுகிறார். நாட்டு மாடுகளை ஊக்குவிக்க வேண்டும். பிரதமர் விவசாய நிகழ்ச்சியில் மட்டுமே பங்கேற்கிறார். வேறு எந்த கட்சி நிகழ்ச்சிகளும் கிடையாது.

மருத்துவர்கள் பயங்கரவாதிகளாக செயல்பட்டுள்ள தகவல் அதிர்ச்சி அளிக்கிறது. பயங்கரவாதிகளை தடுத்து நிறுத்துவதில் இந்திய பாதுகாப்பு படையினர் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர்.

இந்தியாவில் குஜராத்தில் உள்ள டாக்டர்கள் ஐதராபாத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கு காரணம், அவர்கள் கோவில்களில் வழங்கப்படும் பிரசாதங்களில் ரசாயனம் கலந்து பலரை கொல்வதற்கும் சதி திட்டம் தீட்டியுள்ளனர். டாக்டர்கள் மீது யாருக்கும் சந்தேகம் வராது என்பதால், மருத்துவர்களை பயங்கரவாத செயல்களில் ஈடுபட வைத்துள்ளனர்.

மும்பையில் நடந்தது போன்று டெல்லியில் நடத்த வேண்டும் என்பதற்காக இதை செய்தோம் என தெரிவித்துள்ளனர். எல்லா அரசியல் கட்சியினரும் ஒன்றாக இணைந்து இதனை வேரில் இருந்து பிடுங்கி எறிய வேண்டும் என்றார்.




# சாலையில் தரையிறங்கிய சிறிய ரக போர் விமானம்

**புதுக்கோட்டை,நவ.14:**




திருச்சியில் இருந்து புதுக்கோட்டை வழியாக காரைக்குடி, சிவகங்கை ராமநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லக்கூடிய முக்கியமான தேசிய நெடுஞ்சாலை ஆக உள்ளது. இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலை அருகே இன்று சாலையில் பிற்பகல் அவசரமாக சிறிய ரக போர் விமானம் தரை இறக்கப்பட்டது.


சாலையில் தரையிறக்கப்பட்ட நேரத்தில் வாகனங்கள் எதுவும் செல்லாததால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. போர் விமானத்தில் 2 பேர் இருந்ததாக கூறப்படுகிறது. போர் விமானம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக தரையறுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

தகவல் அறிந்ததும் கீரனூர் போலீஸார் மற்றும் வருவாய் துறையின் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டனர். போர் விமானம் தரையிறக்கப்பட்ட தகவல் அறிந்து ஏராளமானோர் திரண்டு பார்வையிட்டனர். விமானம் அருகே யாரையும் நெருங்க விடாமல் போலீஸார் அனுப்பி வைத்தனர்.

போர் விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறை சரி செய்வதற்காக தஞ்சாவூர் விமான நிலையத்திலிருந்து பொறியாளர்கள் விரைந்து கொண்டு இருப்பதாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



# ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் சிறப்பு அலங்காரம்



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதியில் அமைந்துள்ள ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் வியாழக்கிழமை காலை சிறப்பு அலங்காரம் நடைபெற்றது.

# வரும் 21-ந்தேதி கடலம்மா மாநாடு



## சீமான் அறிவிப்பு


**நெல்லை, நவ.14:**
நெல்லை மாவட்டம் கூத்தன்குழியில் 'கடலம்மா மாநாடு' நடத்தப்படும் என்று நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், நெல்லை மாவட்டம் கூத்தன்குழியில் வரும் 21-ந்தேதி மாலை 4 மணியளவில், 'கடலம்மா மாநாடு' நடத்தப்படும். ஆதி நீயே! ஆழித்தாயே! என்ற முழக்கத்தை முன் வைத்து 'கடலம்மா மாநாடு' நடத்தப்படும்.

இம்மாபெரும் மாநாட்டில் கட்சியின் மாநில, மண்டல, மாவட்ட, தொகுதிப் பொறுப்பாளர்களும், அனைத்துப் பாசறைகளின் அனைத்துநிலைப் பொறுப்பாளர்களும், நாம் தமிழர் உறவுகளும், பொதுமக்களும் பெருந்திரளாகப் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# புனரமைக்கப்பட்ட புதிய அம்மன் தேர் வெள்ளோட்டம் நிகழ்வு



**திருவண்ணாமலை, நவ.14:**
திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோயில் அம்மன் தேர் ரூ. 71.40 லட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு பணிகள் நடைபெற்றது. வருகின்ற நவம்பர் 14ஆம் தேதி காலை 10.05 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் வெள்ளோட்டம் நடைபெறுகிறது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# "விருதுநகர் புத்தகத் திருவிழா"






**சென்னை, நவ.14:**
ராகவிசினி ஆர்ட்ஸ் சார்பிலும், நீலாவதி டிரஸ்ட் சார்பிலும் திரைப்பட இயக்குனரும் , நடிகரும் , தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினரும் , சமூக சேவகருமான சேவா ரத்னா டாக்டர் ஜெ.விக்டர் D.M.E., D.F.S., மற்றும் திரைப்பட நடிகரும், சமூக சேவகருமான டாக்டர் நாகமலை புதுக்கோட்டை செந்தில் குமார் இணைந்து விருதுநகர் 4 ஆவது புத்தகத் திருவிழாவை முன்னிட்டு விருதுநகர் மாவட்ட கலெக்டர் மரு.என்.ஓ.சுகபுத்ரா.இ.ஆ.ப. அவர்களுக்கு புத்தகம் வழங்கி வாழ்த்துக்கள் கூறினார்கள்.

# சீர்காழி விவேகானந்தா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளைஞர்கள் தொழில் தொடங்க ஒருங்கிணைந்த ஆலோசனை கூட்டம்



**சீர்காழி , நவ , 14:**
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி விவேகானந்தா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளைஞர்கள் சுய தொழில் தொடங்க ஒருங்கிணைந்த ஆலோசனை கூட்டம் நடைப்பெற்றது. கல்லூரி முதல்வர் சுகந்தி வரவேற்றார். விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தாளாளர் கே.வி.ராதாகிருஷ்ணன், கல்லூரி இயக்குனர் டாக்டர் பி.முத்துக்குமார் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக தமிழ் பால் நிறுவன இயக்குனர் தியாகராஜன் கலந்து கொண்டார். விஜய் சுபம் பெனிபிட் பண்ட் நிதி லிட் நிர்வாக இயக்குனர், லயன்ஸ் சங்க முன்னாள் மாவட்ட கவர்னர் கியான்சந்த் ஜெயின், சீர்காழி சிட்டி யூனியன் வங்கி கிளை மேலாளர் பிரசன்னா, ஹெச்டிஎப்சி வங்கி கிளை மேலாளர் ஐஸ்வர்யா , மாவட்ட தொழில் மைய மேலாளர் திருமுருகன் கலந்து கொண்டார்கள். ஜிஎஸ்டபுள்வியூ ஆர்கனைசேஷன் தலைவர் , டிஜிஎஸ் பேக் கம்பெனி சத்யா என்கிற சத்யநாராயணன் நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பு செய்து நடத்தினார்.

# நீங்களும் புத்தர் ஆகலாம் நூல் வெளியீட்டு விழா



**திருவண்ணாமலை,நவ.14:**
திருவண்ணாமலை ஆண்டாள் சிங்காரவேலு திருமண மண்டபத்தில் மாலை நூல் வெளியீட்டு விழா வழக்கறிஞர் பழனிராஜ் அவர்களின் பத்தாவது படைப்பான நீங்களும் புத்தர் ஆகலாம் நூல் வெளியீட்டு விழா அரைநாதர் மணி மண்டப அறக்கட்டளை தலைவர் முனைவர் மாதவா.சின்னராஜ் தலைமையில் நடைபெற்றது. முன்னிலை தொழிலதிபர் அமரேசன் வழக்கறிஞர் கஜேந்திரன்.

நூல் வெளியிட்டார் ஆகாஷ் முத்துகிருஷ்ணன் எம் டி ஆகாஷ் குழுவும். நூல் பெறுபவர் சி எஸ் துரை ஆண்டாள் சிங்காரவேலு திருமண மண்டபம் உரிமையாளர் வாழ்த்துரை வி. மதியழகன் மாவட்ட கல்வி அலுவலர் ஓய்வு, பாசறை பாபு வழக்கறிஞர்,ப. குப்பன் திருக்குறள் தொண்டு மையம் நிறுவனர். ச.சுப்பிரமணியன் எழுத்தாளர் வாசகர் வட்ட தலைவர் திருவண்ணாமலை வார்த்தை வித்தகர் நல்ல. பன்னீர்செல்வம் முதல்வர் நவீனா தட்டச்சு கணனி பயிலகம் வேட்டவலம். மாவட்ட வருவாய் அலுவலர் ஓய்வு செல்வராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் முக்கிய பிரமுகர்ள் கலந்து கொண்டார்கள்.

# நயினார் நாகேந்திரன் வீட்டை நோட்டமிட்ட மர்மநபர்கள்



**நெல்லை, நவ.14:**
டெல்லிசெங்கோட்டையில் நடந்த பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து தமிழகம் முழுவதும் போலீசார் உஷார்படுத்தப்பட்டு அதிரடி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனிடையே சமீப காலமாகவே தமிழகத்தில் உள்ள முக்கிய அரசியல் கட்சி தலைவர்கள், திரை பிரபலங்கள் உள்ளிட்டோர் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல்கள் வந்து கொண்டிருக்கிறது. நேற்று அமைச்சர் கே.என். நேரு உள்ளிட்ட 3 தி.மு.க. அமைச்சர்களின் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்த நிலையில் நேற்று நெல்லையில் உள்ள பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வீட்டை மர்ம நபர்கள் நள்ளிரவில் நோட்டமிட்டது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பாளையங்கோட்டை பெருமாள்புரம் பகுதியில் உள்ள நயினார் நாகேந்திரன் வீட்டினை சுற்றி 3 புறங்களிலும் சாலைகள் செல்கின்றன. இந்நிலையில் இந்த சாலையில் நேற்று நள்ளிரவு 11.35 மணி அளவில் மர்ம நபர்கள் 2 பேர் ஹெல்மெட் அணிந்தபடி மொபட்டில் வந்துள்ளனர். அவர்கள் நயினார் நாகேந்திரன் வீட்டுக்கு திரும்பும் சாலையில் மூலையில் நின்றபடி அவரது வீட்டை நோட்டமிட்டுள்ளனர். இதனை அக்கம் பக்கத்தில் உள்ள வீடுகளில் வசிக்கும் நபர்கள் நயினார் நாகேந்திரனுக்கு தகவல் தெரிவிக்கவே, அவரது உதவியாளர்கள் மூலம் வீட்டை சுற்றிலும் பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி. கேமராக்களை ஆய்வு செய்துள்ளனர்.

அப்போது வெள்ளை நிற ஹெல்மெட் அணிந்தபடி ஒரே மொபட்டில் வந்த 2 மர்ம நபர்கள் அவரது வீட்டை புகைப்படம் எடுத்துள்ளனர். அதன் பின்னர் அங்கிருந்து புறப்பட்ட அந்த நபர்கள் மீண்டும் சிறிது நேரம் கழித்து அங்கு வந்து வீட்டை நோட்டமிட்டு சென்ற காட்சிகள் அதில் பதிவாகி இருந்தது.

இதைத் தொடர்ந்து பெருமாள்புரம் போலீசாருக்கு இன்று காலை தகவல் தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் ஏதும் விடுக்கப்பட்டதா? என்பது குறித்தும் உளவுத்துறை போலீசார் மூலமாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே டெல்லி செங்கோட்டை குண்டுவெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் அவருக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் நேற்று அவர் அறந்தாங்கியில் நடந்த பிரசார பயணத்தில் கலந்து கொண்டார். அங்கும் அவருக்கு கூடுதல் போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இதனிடையே நேற்று நெல்லையில் உள்ள அவரது வீட்டில் மர்ம நபர்கள் நோட்டமிட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அவரது குடும்பத்தினர் யாரும் நேற்று வீட்டில் இல்லை. அவரது மகன் உள்ளிட்ட குடும்பத்தினர் அனைவரும் வெளியூருக்கு சென்று விட்ட நிலையில் வீட்டில் யாரும் இல்லை. இதனால் வந்த மர்மநபர்கள் திருட்டு சம்பவத்தில் ஈடுபடும் நோக்கத்துடன் நோட்டமிட்டார்களா? அல்லது வேறு ஏதேனும் பயங்கர சதி திட்டத்துடன் நோட்டமிட்டார்களா? என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# துர்கா ஸ்டாலின் எழுதிய அவரும் நானும் என்கிற நூலை அறிமுகம்



பாளையங்கோட்டை மைய நூலகத்தில் பொதிகைத் தமிழ்ச் சங்கம் சார்பாக நடந்த திருமதி துர்கா ஸ்டாலின் எழுதிய அவரும் நானும் என்கிற நூலை அறிமுகம் செய்து பேசினார் கவிஞர் பேரா. உடன் முதன்மை நூலகர் ஜி.திருஞானசம்பந்தம்,பொதிகைத் தமிழ்ச் சங்க செயற்குழு உறுப்பினர்கள் பா.இராம கிருஷ்ணன்,ந.வனசெல்வி,மதுரை சந்தானம் ஆகியோர் உள்ளனர்.



**திருவண்ணாமலை, நவ.14:**
திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை புரிந்த மாண்புமிகு வேளாண்மை -உழவர் நலத்துறை மாண்புமிகு. அமைச்சர் MRK பன்னீர்செல்வம் அவர்களை டாக்டர் எ.வ.வே கம்பன் அவர்கள் பொன்னாடை போர்த்தி வரவேற்றார். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# புதுக்கோட்டை - திருச்சி நெடுஞ்சாலையில் தரையிறங்கிய விமானத்தால் பரபரப்பு



**புதுக்கோட்டை, நவ.14:**
சேலத்தில் இருந்து நேற்று மதியம் ஒரு பயிற்சி விமானம் புறப்பட்டு சென்றது. திருச்சி-புதுக்கோட்டை சாலையில் நார்த்தாமலை அருகே அந்த விமானம் சென்றது. திடீரென்று அந்த விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது.

இதனால் விமானிகள் அதை சாலையில் தரை இறக்கினர். இதில் விமானிகள் 2 பேருக்கு காயம் ஏற்பட்டது. திடீரென்று சாலையில் விமானம் தரை இறங்கியதல பரபரப்பு உண்டானது. விமானிகள் 2 பேருக்கு காயம் ஏற்பட்டது.

போலீசார் மற்றும் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர்.

# திருப்பூரில் பவர் டேபிள் சங்கத்தினர் வேலைநிறுத்த போராட்டம்: ஆடை தயாரிப்பு பணிகள் முடக்கம்



**திருப்பூர், நவ.14:**
திருப்பூரில் உள்நாட்டு பின்னலாடை உற்பத்தி நிறுவனங்களுக்கு பவர் டேபிள் நிறுவனங்கள் ஜாப் ஒர்க் முறையில் பின்னலாடைகளை உற்பத்தி செய்து கொடுக்கின்றனர். 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை உள்நாட்டு பனியன் உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் பவர் டேபிள் சங்கத்தினர் கூலி உயர்வு ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். அதன்படி கடந்த 2022ம் ஆண்டு 2 சங்கத்தினர் இடையே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

இதில் பவர் டேபிள் நிறுவனங்களுக்கு முதல் ஆண்டு 17 சதவீத கூலி உயர்வும் , அடுத்து வரும் 3 ஆண்டுகளுக்கு தலா 7 சதவீதமும் வழங்க ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. ஆண்டுதோறும் இவை முறையாக பின்பற்றப்பட்டு வரக்கூடிய நிலையில் கடந்த ஜூன் 6-ந்தேதி முதல் உயர்த்தப்பட வேண்டிய 7 சதவீத கூலி உயர்வு சில நிறுவனங்கள் வழங்கினாலும் ஒரு சில நிறுவனங்கள் வழங்காமல் கால நீட்டிப்பு செய்து வருவதால் ஜாப் ஒர்க் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே உடனடியாக கூலி உயர்வை அமல்படுத்த வேண்டும் என கடந்த 7ம் தேதி முதல் கூலி உயர்வு வழங்காத நிறுவனங்களில் இருந்து ஆர்டர்கள் எடுப்பதையும் , செய்து முடித்த ஆர்டர்களை கொடுப்பதையும் நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் 15 நாட்களுக்குள் கூலி உயர்வு வழங்காத நிறுவனங்கள் கூலி உயர்வை அமல்படுத்த வேண்டும். பவர் டேபிள் சங்கம் உற்பத்தி நிறுத்தத்தை செய்வதால் தொழில் பாதிக்கக்கூடும் என சைமா சங்கம் சார்பில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில் பவர் டேபிள் சங்கம் சார்பில் நேற்று நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் கூலி உயர்வு வழங்காத நிறுவனங்களுடனான முழு அளவிலான உற்பத்தி நிறுத்தம் இன்று முதல் தொடர உள்ளதாகவும் , கூலி உயர்வை அமல்படுத்தினால் அதற்குள்ளாக போராட்டத்தை கைவிடுவது , இல்லாத பட்சத்தில் அடுத்த கட்ட போராட்டம் குறித்து அறிவிப்பது என தெரிவித்தனர்.


இதையடுத்து இன்று முதல் பவர் டேபிள் உரிமையாளர்கள் உற்பத்தி நிறுத்த போராட்டத்தை தொடங்கி உள்ளனர். இதனால் ஆடை உற்பத்தி பணிகள் முடங்கி உள்ளது

## கால பைரவர் சிறப்பு அபிஷேகம்



திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம் ஆர். குண்ணத்தூர் நவம்பர் 13 ஐப்பசி மாதம் தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு ஸ்ரீ வீர ஜம்பேஸ்வரர் ஆலயத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ கால பைரவர் அபிஷேகம், அலங்காரத்துடன் அருள் பாலிக்கும் காட்சி.

## ஐப்பசி மாதம் தேய்பிறை அஷ்டமி சிறப்பு வழிபாடு



திருவண்ணாமலை மாவட்டம் நவம்பர்-13 கீழ்பென்னாத்தூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் ஐப்பசி மாத தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு ஸ்ரீ காலபைரவருக்கு சிறப்பு அபிஷேகம், வண்ண மலர் மாலைகளால், அலங்காரத்துடன் எலுமிச்சம்பழம் மாலைகளுடன், வடை மாலையுடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மஹா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் ஸ்ரீ காலபைரவரை வேண்டி அருள் பெற்றனர். பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

## முயல் வேட்டை - செங்கம் அருகே மின்வேலியில் சிக்கி 2 பேர் உயிரிழப்பு

**செங்கம், நவ.14:** திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தை சேர்ந்த 4 இளைஞர்கள் முயல்வேட்டைக்கு சென்றனர். அப்போது குப்பநத்தம் பகுதியில் மின்வேலியில் சிக்கி 2 பேர் உயிரிழந்தனர்.


சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட மின்வேலியில் சிக்கி 17 மற்றும் 27 வயதான இளைஞர்கள் உயிரிழந்தது தெரிய வந்துள்ளது.

சட்டவிரோதமாக மின்வேலி அமைத்த நில உரிமையாளர் பாஷா என்பவரை கைது செய்து போலீசார் விசாரணை நடத்தினர். நில உரிமையாளர் இளைஞர்களின் உடல்களை அருகில் இருந்த கிணற்றில் வீசியது விசாரணையில் தெரிய வந்துள்ளது.






## மஹா கால பைரவ அஷ்டமி சிறப்பு வழிபாடு







கடலூர் மாவட்டம் நவம்பர் -13 கீழ் புவனகிரி ஸ்ரீ வெள்ளியம்பலம் சுவாமிகள் மடத்தில் ஸ்ரீ மீனாட்சி சமேத ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீ மஹா கால பைரவருக்கு சிறப்பு அபிஷேகங்கள், பால், தயிர், சந்தனம், பஞ்சாமிர்தம், தேன், இளநீர், பன்னீர், வெட்டிவேர் எண்ணற்ற வாசனை திரவங்களைக் கொண்டு ஸ்ரீ மஹா காலபைரவருக்கு சிறப்பு மஹா ஹோமம், மஹா அபிஷேகம், வண்ண வண்ண மலர் மாலைகளால் அலங்காரத்துடன் , வடை மாலையுடன், சந்தன காப்பு அலங்காரத்துடன், வெள்ளி கவசத்துடன், தயிர்சாதம் படையல் வைத்து மஹா தீபாராதனையும் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஸ்ரீ மஹா காலபைரவரை வேண்டி அருள் பெற்றனர். பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

## எழும்பூர்-மதுரை வைகை எக்ஸ்பிரஸ் ரெயில் சேவையில் மாற்றம்

### தெற்கு ரெயில்வே அறிவிப்பு

**சென்னை, நவ.14:** தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

சென்னை கோட்டத்தில் பல்வேறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இருப்பதால் ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்படுகிறது. அதன் விவரம் வருமாறு:-

* சென்னை சென்டிரலில் இருந்து வருகிற 26-ந்தேதி இரவு 10.50 மணிக்கு புறப்பட்டு பெங்களூரு செல்லும் மெயில் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்.12657), அதற்கு மாற்றாக சென்னை சென்டிரலில் இருந்து மறுநாள் (27-ந்தேதி) அதிகாலை 1.30 மணிக்கு (2 மணி நேரம் 40 நிமிடம் தாமதம்) புறப்பட்டு செல்லும்.

* சென்னை சென்டிரலில் இருந்து வருகிற 26-ந்தேதி இரவு 11 மணிக்கு புறப்பட்டு ஈரோடு செல்லும் ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரெயில் (22649), அதற்கு மாற்றாக மறுநாள் (27-ந்தேதி) அதிகாலை 1.40 மணிக்கு (2 மணி நேரம் 40 நிமிடம் தாமதம்) புறப்பட்டு செல்லும்.

* எழும்பூரில் இருந்து வருகிற 26, 27, 29 மற்றும்



டிசம்பர் 1 ஆகிய தேதிகளில் மதியம் 1.45 மணிக்கு புறப்பட்டு மதுரை செல்லும் வைகை எக்ஸ்பிரஸ் ரெயில் (12635), வழக்கமாக மதுரை செல்லும் நேரத்தைவிட 20 நிமிடம் தாமதமாக சென்றடையும்.

* போத்தனூரில் இருந்து வருகிற 21-ந்தேதி மாலை 6.30 மணிக்கு புறப்பட்டு சென்னை சென்டிரல் வரும் சிறப்பு ரெயில் (06124), வழக்கமாக சென்டிரல் வரும் நேரத்தைவிட 15 நிமிடம் தாமதமாக வந்தடையும்.

* போத்தனூரில் இருந்து வருகிற 28-ந்தேதி மாலை 6.30 மணிக்கு புறப்பட்டு சென்னை சென்டிரல் வரும் சிறப்பு ரெயில் (06124), வழக்கமாக வரும் நேரத்தைவிட 5 நிமிடம் தாமதமாக வந்தடையும்.

* சென்னை சென்டிரலில் இருந்து வருகிற 17-ந்தேதி இரவு 11.50 மணிக்கு புறப்பட்டு கன்னியாகுமரி செல்லும் சிறப்பு ரெயில் (06151), வழக்கமாக கன்னியாகுமரி செல்லும்நேரத்தைவிட 25 நிமிடம் தாமதமாக சென்றடையும்.

* சென்னை சென்டிரலில் இருந்து வருகிற 19,21 ஆகிய தேதிகளில் இரவு 11.50 மணிக்கு புறப்பட்டு ஆந்திர மாநிலம் குண்டக்கல் செல்லும் சிறப்பு ரெயில் (06091), வழக்கமாக செல்லும் நேரத்தைவிட 15 நிமிடம் தாமதமாக சென்றடையும்.

* சென்னை சென்டிரலில் இருந்து வருகிற 21-ந்தேதி இரவு 11.30 மணிக்கு புறப்பட்டு கர்நாடக மாநிலம் சிவமொக்கா நகரம் செல்லும் வாராந்திர எக்ஸ்பிரஸ் ரெயில் (12691), வழக்கமாக நேரத்தைவிட 20 நிமிடம் தாமதமாக சென்றடையும்.

* சென்னை சென்டிரலில் இருந்து வருகிற 24-ந்தேதி இரவு 8.10 மணிக்கு புறப்பட்டு மங்களூரு செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (12601), வழக்கமாக நேரத்தைவிட 15 நிமிடம் தாமதமாக சென்றடையும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வார விடுமுறை நாட்களையொட்டி 920 சிறப்பு பஸ்கள் இன்று இயக்கம்- 18 ஆயிரம் பேர் முன்பதிவு

**சென்னை, நவ.14:** அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

சென்னைகிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு நாளை 340 பஸ்களும், நாளை மறுநாள் 350 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னைகோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு நாளை 55 பஸ்களும், நாளை மறுநாள் 55 பஸ்களும், இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 100 சிறப்பு பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதவிர, மாதவரத்தில்



இருந்து நாளை மற்றும் நாளை மறுநாள் 20 பஸ்களும், சிறப்பு பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

மேலும் வருகிற 16-ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) அன்று பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு பஸ்களில் பயணிக்க நாளை 7ஆயிரத்து 227 பயணிகளும், நாளை மறுநாள் 2 ஆயிரத்து 975 பயணிகளும், ஞாயிறு அன்று 7 ஆயிரத்து 563 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் மொபைல் ஆப் மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



## தினம் ஒரு குறள்

**மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.** - குறள் 134

మరచిన శృతులైన మరినేర్చు విప్రుండు
ఓగు పడిన యెడల బాగుపడడు -కురళ్ 134

संभव है फिर अध्ययन, भूल गया यदि वेद ।
आचारच्युत विप्र के, होगा कुल का छेद ॥ - कुराल 134

Marappinum Oththuk Kolalaakum Paarppaan
Pirappozhukkang Kundrak Ketum - Kural 134

## ஐப்பசி மாதம் தேய்பிறை அஷ்டமி சிறப்பு வழிபாடு...



துரிஞ்சாபுரம் ஒன்றியம் வேதமா நகர் எனும் வேடந்தவாடி கிராமத்தில் எழுந்தருளியுள்ள அருள்தரும் வேதநாயகி அம்மை உடனமர் அருள்மிகு வேதநாத ஈஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீ சர்வ வேத பைரவர் தேய்பிறை அஷ்டமி பைரவர் பூஜை ராமன் ஐயர் அவர்களால் அபிஷேகங்கள் பால், தயிர்,சந்தனம், இளநீர்,தேன்,வெட்டி வேர் எண்ணற்ற வாசனை திரவங்களைக் கொண்டு அபிஷேகங்கள் நடைபெற்றது. அலங்காரங்கள் வண்ண வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, சந்தன காப்பு அலங்காரத்துடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் ஸ்ரீ சர்வ வேத பைரவரை வேண்டி அருள் பெற்றனர். பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

## SIR-க்கு எதிர்ப்பு: தமிழகம் முழுவதும் த.வெ.க ஆர்ப்பாட்டம் நடத்த திட்டம்

**சென்னை, நவ.14:** வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை கண்டித்து தவெக சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, SIR-ஐ கண்டித்து வரும் நவம்பர் 16ம் தேதி மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்த தவெக திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்திற்குதங்களதுஎதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் தவெக



ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், ஆர்ப்பாட்டத்தில் தவெக மாவட்ட செயலாளர்கள் போராட்டத்தை ஒருங்கிணைக்க அறிவுறுத்தி உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

## சென்னையில் இன்று மின்தடை ஏற்படும் இடங்கள்...

**சென்னை, நவ.14:** சென்னையில் பராமரிப்பு பணிகள் காரணமாக ஒரு சில பகுதிகளில் மின் தடை செய்யப்படுகிறது. காலை 9 மணி முதல் பிற்பகல் 2 வரை மின் தடை செய்யப்படும். பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.

அந்த வகையில், நாளை மின் தடை செய்யப்படும் பகுதிகள் குறித்து தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அதன்படி, சென்னையில் நாளை (14.11.2025) காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக பின்வரும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும். அதன்படி,

ஐ.டி. காரிடர்: எம்சிஎன் நகர் மற்றும் விரிவாக்கம், ஃபவுண்டரி சாலை, பிள்ளையார் கோவில் தெரு, எஸ்பிஐ காலனி, கங்கை அம்மன் கோவில் தெரு, 200 அடி ரேடியல் சாலை, போஸ்ட் ஆபிஸ் தெரு, வேம்புலியம்மன் கோவில் தெரு, தேரடி தெரு, பஞ்சாயத்து சாலை, குளக்கரை தெரு, ஆறுமுகம் அவென்யூ, குமரன் நகர், ஆனந்த் நகர், எம்கா நகர் அவென்யூ, செல்வகணபதி அவென்யூ, சரவணா நகர், செல்வகுமார் அவென்யூ, சீவரம், தணிகாசலம் தெரு, ராமச்சந்திரன் தெரு, காமராஜ் தெரு, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் சாலை, எம்.ஜி. சாலை, பாலவிநாயகர் அவென்யூ, பிரகாசம் தெரு, எல்லையம்மன் நகர், ஸ்ரீபுரம் சாலை, ராமன் நகர், ஓ.எம்.ஆர்., திருமலை நகர் இணைப்பு, ராமன் நகர், ஓ.எம். ஆர்., திருமலை நகர் இணைப்பு, ராமப்பா நகர், ராமப்பா நகர், சி.பி.ஐ.டி. காலனி, மீனாட்சி புரம், மனோகர் நகர், விஜிபி சாந்தி நகர்.

## கவிதை அரங்கம்!






வாழ்க்கை வாழ பல
வருடங்கள் இருப்பினும்
வாழ்க்கை மாற சில
நிமிடங்கள் போதும்

எண்ணத்தில் தூய்மையும்
சொல்லில் இனிமையும்
செயலில் நேர்மையும்
கொண்டதே எளிமையான
வாழ்க்கை


உனது வலிகள் நீ யார்
என்பதை
தீர்மானிப்பதில்லை
அந்த வலிகளிலிருந்து நீ
எப்படி மீண்டு
வருகிறாய் என்பது தான்

சிலரிடம் பேசினால்
நிம்மதி கிடைக்கும்
சிலரிடம் பேசாமல்
இருந்தாலே நிம்மதி
கிடைக்கும்

ஒவ்வொரு நாளும்
விடியும் போது
ஒரு எதிர்பார்ப்பு
முடியும்போது
ஒரு அனுபவம்

உலகில் நாம் விரும்பும்
அத்தனையும் இரு முறை
தான் அழகாக தெரியும்
ஒன்று அடைவதற்கு முன்பு
இரண்டு இழந்ததற்கு பின்பு

## ஆக்சலோட்டல்..



ஆக்சலோட்டல் என்ற உயிரினம் தன் உடலில் எந்த பாகம் காயமானாலும் அல்லது வெட்டுப் பட்டாலும்..

அதை மீண்டும் உருவாக்கும் அற்புத சக்தி கொண்டது...

இயற்கை அதற்கு அப்படியொரு சக்தியை கொடுத்து இருக்கிறது.....

அதை புதிதாக எழச் செய்கிறது.....

நமக்கும் அது போலவே இயற்கை ஒரு சக்தியை கொடுத்து இருக்கிறது

உடைந்த மனதை மீண்டும் சேர்க்கும் சக்தி...நம் ஒவ்வொருவருக்குள்ளும் மறைந்து கிடக்கிறது....

காயங்கள் உங்களை பலவீனமாக்க வரவில்லை....

உங்களை புதிய வடிவத்தில் உருவாக்க வந்தவை...

இன்று உங்கள் உள்ளத்திலிருக்கும் அந்த மறுபிறப்பு சக்தியை நம்பி முன்னேறுங்கள்...

வாழ்க வளமுடன்
என்றும் அன்புடன்

நன்றி - ஆனந்தி

## "மொபைல் என்னும் ஏணி"

அந்தப் பள்ளியின் மதிய உணவு இடைவேளை.

ஸ்டாஃப் டைனிங் ஹாலில் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்த ஆசிரியர்கள் அனைவரும் ஒரே விஷயம் குறித்து வருத்தப்பட்டுப் பேசிக் கொண்டிருந்தனர்.

அது வேறொன்றுமில்லை. சமீப காலமாய் அந்தப் பள்ளி மாணவர்கள் மத்தியில் பரவியிருந்த மொபைல் போன் மோகம் பற்றிய கவலைதான்.


"ஸ்கூலுக்குள்ளார மொபைல் கொண்டு வரக்கூடாது" எவ்வளவுதான் கண்டிஷன் போட்டாலும் எப்படியோ வாட்ச்மேன் கண்ணுல மண்ணைத் தூவிட்டு கொண்டு வந்திடறானுக... கிளாஸ்ல கடைசி பெஞ்ச்ல உட்கார்ந்திட்டு சவுண்டைக் கம்மியா வெச்சுப் படம் பார்த்திட்டிருக்கானுக" மிகவும் வருந்தினார் விளையாட்டு ஆசிரியர் முத்துக்கிருஷ்ணன்.

"அது மட்டுமில்லை சார்... ஈவினிங் ஸ்கூல் விட்டதும் வீட்டுக் கூடப் போகாம ஆங்காங்கே மரத்தடில உட்கார்ந்து மொபைல்ல ரீல்ஸ் போட்டுட்டிருக்கானுக... இப்படியே போனா இனி நம்ம ஸ்கூலோட கல்வித் தரம் கீழே போயிடும்" இது அறிவியல் ஆசிரியர்.

நீண்ட நேரம் அமைதி காத்திருந்த வரலாறு ஆசிரியர் வெள்ளிங்கிரி மெல்ல ஆரம்பித்தார். "நீங்கெல்லாம் ஒத்துழைச்சீங்கன்னா... நாம இதை பாஸிட்டிவ்வா மாத்தலாம்"

"எப்படி... எப்படி"

"இண்டர்நெட்டிலோ... அல்லது சோஷியல் மீடியாவிலோ... தாங்கள் படித்த அரிய... புதுமையான... வித்தியாசமான... விஷயங்களை ஒரு தாளில் ஒரு பக்க அளவில் எழுதி... அதற்கென்று வைக்கப்பட்டுள்ள



பெட்டியில் போடணும்... அதில் சிறப்பான மூன்று பதிவுகளை எடுத்து அதை ஸ்கூல் நோட்டீஸ் போர்டில் வைத்து அதை எழுதியவர்களுக்கு தலா ஆயிரம் ரூபாய் பரிசுன்னு அறிவிப்பு தரலாம்... நிச்சயம் பசங்க நெட்டுக்குள்ளார பூந்து நல்ல விஷயங்களைத் தேடுவாங்க!"

"பரிசுத் தொகையை பள்ளி நிர்வாகம் கொடுக்குமா?" தமிழாசிரியர் சந்தேகத்தைக் கிளப்ப,

"நோ ப்ராப்ளம்... நானே என் சம்பளப் பணத்திலிருந்து தர்றேன்!"

இந்த ஏற்பாடு நடைமுறைக்கு வந்த போது, ஆரம்பத்தில் சற்று மந்தமாகத்தான் இருந்தது. முதல் இரண்டு மாதங்கள் பரிசு பெற்ற மாணவர்களைப் பார்த்து ஊக்கமான மற்ற மாணவர்கள் தாங்களும் இண்டர்நெட்டிற்கு புகுந்து தேட ஆரம்பிக்க,

அதற்குப் பிறகு அப்பள்ளியில் எந்த மாணவனும் சமூக வலை தளத்தின் மோசமான, சினிமா மற்றும் அரசியல் சம்மந்தப்பட்ட பகுதிகளுக்குள் புதையாமல் பண்பட்டுப் போயினர்.

ஆண்டின் இறுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லாப் பதிவுகளும் பள்ளியின் சார்பில் புத்தகமாக அச்சிடப்பட, அந்த ஆண்டிற்கான சிறந்த புத்தகத்திற்கான அரசு விருதும், ரூபாய் இருபத்தைந்தாயிரமும் அப்புத்தகத்திற்கு வழங்கப்பட்டது.

பள்ளி நிர்வாகமும், மற்ற ஆசிரியர்களும், மாணவர்களும் அத்தொகையை வெள்ளிங்கிரி ஆசிரியருக்கே அவரது பணி ஓய்வு நாளன்று வழங்கத் தீர்மானித்தனர்.

ஆனால், அதை வாங்க மறுத்த வெள்ளிங்கிரி ஆசிரியர், "இத்தொகையை நான் இந்தப் பள்ளியின் நூலகத்திற்கு இன்னும் பல கம்ப்யூட்டர் புத்தகங்களை வாங்குவதற்காக... நன்கொடையாக வழங்குகிறேன்." என்று சொல்லி முடிக்க முடிக்க எழுந்த கைதட்டல் ஓசை விண்ணை எட்டியது.



முகில் தினகரன்,
கோயமுத்தூர்.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*"சார் உங்க பொண்ணு என் மேலே பைத்தியமா இருக்கா, அவளையே நான். . . (அப்பா குறுக்கிட்டு)*

*"அவ ஒரு சரியான பைத்தியம்னா"*

*"அதான் சார் என் மேல பைத்தியம்"*

*"அதான் எப்படீன்னு புரியல"*



## தினம் ஒரு சமையல்



### திணை கட் முறுக்கு

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| திணை மாவு | -1 கப் |
| உளுந்து மாவு | -1/4 கப் |
| ஓமம் | -1 டீஸ்பூன் |
| எண்ணெய் | -2 டேபிள் ஸ்பூன் |
| பெருங்காய தண்ணீர் | -1 டேபிள் ஸ்பூன் |
| உப்பு | -தேவையான அளவு |
| பொரிப்பதற்கு: | |
| எண்ணெய் | -1/2 லிட்டர் |

செய்முறை:

திணை அரிசியை நன்கு கழுவி,தண்ணீரை முற்றிலும் வடித்து விட்டு ஒரு துணியின் மேல் போட்டு நன்கு ஆற விடடு, மிக்ஸி ஜாரில் சேர்த்து நைஸாக பவுடர் செய்து ஆறவிட்டு சலித்து வைத்துக் கொள்ளவும்.

உளுந்தை வறுத்து, மிக்ஸியில் நைஸாக பொடித்து சலித்து எடுத்துக்கொள்ளவும்.



ஒரு பௌலில் திணை மாவு, உளுந்து மாவு, ஓமம், உப்பு,பெருங்காயத் தண்ணீர், சூடான எண்ணெய் சேர்த்து,அத்துடன் தேவையான அளவு தண்ணீர் ஊற்றி கெட்டியாக முறுக்கு மாவு பதத்தில் மாவை பிசைந்து கொள்ளவும்.

பின்னர் வாணலியை ஸ்டவ்வில் வைத்து, எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் முறுக்கு பிடியில் மாவை வைத்து மிதமான சூட்டில் உள்ள எண்ணையில் பிழியவும்.

ஒரு நிமிடம் கலந்து விட்டு எடுக்கவும். திணை அரிசி முறுக்கு மிக விரைவில் நிறம் மாறிவிடும்.எனவே பார்த்து எடுக்க வேண்டும்.

## சவுக்கு நன்மைகள்



சவுக்கு மரத்தின் நன்மைகள் பல உள்ளன, அவற்றில் முக்கியமாக மண் அரிப்பைத் தடுப்பது, பொருளாதார ரீதியாக லாபம் ஈட்டுவது, காகிதம், விறகு, மரப்பலகை தயாரிப்பது, மற்றும் அதன் இலைகளின் மருத்துவ குணங்கள் ஆகியவை அடங்கும்.

முக்கிய நன்மைகள்

மண் அரிப்பைத் தடுத்தல்: கடற்கரையோரப் பகுதிகளில் காற்றை தடுத்து, மண் அரிப்பைத் தடுப்பதில் சவுக்கு மரம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

பொருளாதார லாபம்: சவுக்கு மரங்கள் காகிதக்கூழ், விறகு, மரப்பலகை போன்ற பொருட்களின் தயாரிப்பிற்குப் பயன்படுத்தப்படுவதால் பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தவை.

மருத்துவ குணம்: சவுக்கு மரத்தின் இலைகளில் ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள், ஆல்கலாய்டுகள், ஃபிளாவனாய்டுகள் மற்றும் பிற பாலிபினால்கள் உள்ளன. இவை அழற்சி எதிர்ப்பு மற்றும் வயிற்றுப்போக்கு எதிர்ப்பு பண்புகளைக் கொண்டுள்ளன.

வேளாண் பயன்: விவசாயிகள் கூடுதல் லாபம் ஈட்டக்கூடிய ஒரு பயிராகவும் சவுக்கு மரம் உள்ளது.

விரைவான வளர்ச்சி: சவுக்கு மரங்கள் விரைவாக வளரும் இயல்புடையவை.

பயன்பாட்டுப் பொருட்கள்: மரக்கூழ், காகிதம், விறகு, மரப்பலகைகள் மற்றும் பல்வேறு பொருட்கள் தயாரிப்பில் சவுக்கு மரம் பயன்படுத்தப்படுகிறது.

வளர்ந்த மரத்திலிருந்து சிறுசிறு பர்னிச்சர்கள், விவசாய கருவிகள் செய்யலாம். கட்டுமானப் பணிகளில் சாரம் அமைக்க தாங்கு கழிகளாகவும், சிறு வீடுகளின் கூரை மற்றும் கம்பங்களுக்கும் பயன்படுகிறது.

காகித உற்பத்தி தொழிற்சாலைகளில் மூலப்பொருளாக இதனைப் பயன்படுத்தலாம். இம்மரத்தை தோட்டங்களின் எல்லையில் காற்றுத் தடுப்பானாகவும் வளர்க்கலாம்.

இம்மரத்தின் வேர்களில் காணப்படும் பிராங்கியா எனப்படும் பாக்டீரியா காற்றிலுள்ள நைட்ரஜனை நைட்ரேட் உப்புகளாக மாற்றி நிலத்தில் சேமிப்பதால் மண்வளம் மேம்படுகிறது.

தூளாக்கப்பட்ட விதையிலிருந்து தயாரிக்கும் களிம்பு தலைவலியைப் போக்கும் மருந்தாக பயன்படுகிறது. இதன் கிளைகளில் உள்ள 6-18 டேனின் கம்பளிகள், பட்டுத்துணிகள் தயாரிக்கவும், மீனவர் வலைகளை உறுதிப்படுத்தவும் பயன்படுகிறது.

## பிரதமர் மோடியின் அம்மாவாக நடிக்கும் நட்சத்திர நடிகை.. யார் தெரியுமா?



பாரத பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்க்கை வரலாறு 'மா வந்தே' தற்போது உருவாகி வருகிறது. இப்படத்தின் அறிவிப்பை அவருடைய 75வது பிறந்தநாள் அன்று அதிகாரப்பூர்வமாக வெளியிட்டனர்.

இதில் மலையான நடிகர் உன்னி முகுந்தன் மோடியாக நடிக்கிறார். வீர் ரெட்டி இப்படத்தை தயாரிக்க கிராந்திக்குமார் இயக்குகிறார். இந்த நிலையில், மா வந்தே படத்தில் நட்சத்திர நடிகை ஒருவர் மோடியின் தாயாக நடிக்கப்போவதாக தகவல் வெளியாகியுள்ளது.

அவர் வேறு யாருமில்லை நடிகை ரவீனா டாண்டன் தான். பிரதமர் மோடிக்கு தனது தாயார் ஹீராபென் மீது மிகுந்த அன்பு உள்ளதை நாம் அனைவரும் அறிவோம். அவருடைய கதாபாத்திரம் என்பது 'மா வந்தே' படத்தில் மிக முக்கியமான ஒன்றாகும்.

அந்த ரோலில் ரவீனா டாண்டன் நடிப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. பாலிவுட் திரையுலகில் மிகவும் பிரபலமான நட்சத்திர நடிகையாக இருப்பவர் ரவீனா டாண்டன். இவர் கே.ஜி.எப் 2 படத்தில் முக்கிய ரோலில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



சினிமா

கடற்கரையில் எடுத்த போட்டோ ஷூட்.

ஹாட் புகை படங்கள் இதோ.

## ஜெயம் படத்தில் நாயகியாக நடிக்க முதலில் தேர்வானது நடிகை சதா இல்லையா?... இவர்தானாம்..

கடந்த 2002ம் ஆண்டு தெலுங்கில் நிதின், சதா, கோபிசந்த் என பலர் நடிக்க வெளியாகி இருந்த திரைப்படம் ஜெயம்.

தேஜா இயக்கத்தில் வெளியான இப்படம் படு மாஸான வெற்றியை பெற்றது. தெலுங்கு நடிகர் நிதின் சினிமாவுக்கு ஹீரோவாக அறிமுகமாகிய படம் ஜெயம் தான்.

தெலுங்கில் வெற்றியடைந்ததை தொடர்ந்து தமிழில் மோகன் ராஜா இயக்கத்தில் ரவி மோகன் மற்றும் சதா நடிக்க ரீமேக் செய்யப்பட்டது. தமிழிலும் இப்படம் நல்ல விமர்சனங்களை பெற்றதோடு பாக்ஸ் ஆபிஸிலும் நல்ல வசூல் வேட்டை நடத்தியுள்ளது.



தற்போது தெலுங்கில் செம ஹிட்டடித்த இப்படத்தில் முதலில் தேர்வான நாயகி குறித்த தகவல் இப்போது வெளியாகியுள்ளது.

தெலுங்கு ஜெயம் படத்தில் சதாவுக்கு முன் வேறொரு கதாநாயகி நடிக்க தேர்வாகியுள்ளார். அந்த கதாநாயகி யார் தெரியுமா, அவர் வேறு யாருமில்லை, ராஷ்மி கவுதம் தான். இதனை நிதின் பட விழா ஒன்றில் கூறி இருக்கிறார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com